அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:60/2016
தேதி : 30/03/2016

# கின்னஸ் சாதனை படைத்திருக்கும் பாடகி பி.சுசீலாவிற்கு நல்வாழ்த்துகள் சமத்துவ மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

தன்னுடைய தேனினும் இனிய குரலால் தமிழர் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட பிரபல பின்னணிப் பாடகி பி.சுசீலா அவர்கள் **17,695** பாடல்கள் பாடி கின்னஸ் சாதனை படைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. தமிழில் மட்டுமல்லாது தெலுங்கு, கன்னடம், மலையாளம் என பல மொழிகளிலும் பாடி ஆறு முறை தேசிய விருது பெற்ற பெருமையோடு 50 ஆண்டு காலத்திற்கும் மேலாக தன் குரல் வளத்தால் திரைப்படப் பாடல்களின் இசைக்கும், கவிதைக்கும் உயிரூட்டிய சிறப்பு பி.சுசீலா அவர்களுக்கு உண்டு. திரைப்படப் பாடல்கள் மட்டுமின்றி நூற்றுக்கணக்கான பக்திப் பாடல்கள் பாடியிருக்கும் பெருமையும் அவருக்குண்டு.

தேனமுதக் கானத்தால் நம் உயிரை உருக்கி வரும் பி.சுசீலா அவர்களின் கலைப்பணி மேலும் பல்லாண்டு காலம் தொடர வேண்டும் என்று வாழ்த்தி, கின்னஸ் சாதனை படைத்திருக்கும் அவருக்கு என் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்